தமிழ்நாடு அரசு

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

## மாநில தொழிற்பயிற்சி குழுமம்

## State Council for Vocational Training (SCVT)

**தனியார் தொழிற்பள்ளிகள் அங்கிகாரம் குறித்த தகவல் மற்றும் அறிவுரைகள்**



**தொழிற்பள்ளி அங்கிகாரம் 2025**

# Industrial School Recognition 2025

**Department of Employment and Training**

Alandur Road, Guindy, Chennai -32

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, கிண்டி. சென்னை–600032**

**2025 தொழிற்பள்ளி – அங்கீகாரம் பெறுவது தொடர்பான அறிவிப்பு**

**I.விண்ணப்பம் வழங்குதல்**

| | |
|---|---|
| 1. | 2025 – 2026 ஆம் கல்வியாண்டிற்கு புதிய தொழிற்பள்ளிகள் துவங்குதல், தொடர் அங்கீகாரம் பெறுதல், ஏற்கனவே அங்கீகாரம் பெற்று இயங்கும் தொழிற்பள்ளிகளில் புதிய தொழிற் பிரிவுகள் / தொழிற் பிரிவுகளில் கூடுதல் அலகுகள் துவங்குதல் ஆகியவற்றிற்கான விண்ணப்பங்கள் இணையதளம் மூலமாக வரவேற்கப்படுகின்றன. 02.01.2025 முதல் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க கடைசி தேதி 29.02.2025 ஆகும். |
| 2. | 2025–2026 ஆம் கல்வியாண்டிற்கு ஒரு தொழிற்பள்ளி ஒரு இணையதள விண்ணப்பம் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். மேற்கண்ட வரிசை எண்.1.ல் குறிப்பிட்டுள்ளவாறு விண்ணப்பிக்கவுள்ள அனைத்து தொழிற்பிரிவுகள் / கூடுதல் அலகுகளுக்கு தேவையான விவரங்கள் அனைத்தும் ஒரு விண்ணப்பத்தில் மட்டுமே அளிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் ஒரே தொழிற்பள்ளியால் சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். |
| 3. | அரசு ஆணை (நிலை) எண்.91, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (எஸ்.2) துறை, நாள் 11.07.2022ன்படி விண்ணப்பம் சமர்ப்பித்தல் அதற்கான விண்ணப்ப கட்டணம், ஆய்வு கட்டணம் மற்றும் கூட்டுவைப்பு தொகை ஆகியவை பின்வருமாறு நிர்ணயம் செய்து அரசாணை பெறப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| **அ)** | **விண்ணப்பம் – Industrial School online portal மூலம் சமர்ப்பித்தல்** | **இரண்டு மாதங்கள் – ஜனவரி 2ம் தேதி முதல் பிப்ரவரி மாதம் இறுதி நாள் முடிய** |
| **ஆ)** | **மண்டல பயிற்சி இணை இயக்குநர்களால் தொழிற்பள்ளிகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய காலம்** | **இரண்டு மாதங்கள் – மார்ச் மற்றும் ஏப்ரல் முடிய** |
| **இ)** | **ஆய்வறிக்கை ஆணையரகத்தில் பரிசீலிக்கப்பட்டு அங்கீகாரம் வழங்குதல்** | **இரண்டு மாதங்கள் – மே மற்றும் ஜூன் முடிய** |
| **ஈ)** | **தொழிற்பள்ளிகளில் பயிற்சி துவங்குதல்** | **ஒவ்வொரு ஆண்டும் ஜூலை முதல் நாள்** |
| **உ)** | **விண்ணப்ப கட்டணம் (விண்ணப்பிக்கும் அனைத்து தொழிற் பிரிவுகளுக்கும் சேர்த்து)** | **ரூ.5,000./–** |
| **ஊ)** | **ஆய்வு கட்டணம்** | **ரூ.8,000./–** |
| **எ)** | **கூட்டுவைப்பு தொகை** | **ரூ.2,50,000./–** |

விண்ணப்ப கட்டணம் (விண்ணப்பிக்கும் அனைத்து தொழிற் பிரிவுகளுக்கும் சேர்த்து) ரூ.5,000/– விண்ணப்ப கட்டணம் செலுத்த வேண்டும்.

விண்ணப்ப கட்டணத்தை கீழ்க்கண்ட வங்கி கணக்கில் RTGS/NEFT வாயிலாக செலுத்தி அந்த RTGS/NEFT எண் மற்றும் Application No.ஐ (உதாரணம் **N106200049572410 and 210001)**

| | |
|---|---|
| | இணையதள விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.<br>**Account Name: Deputy Director (IS) and Assistant Accounts Officer, Department of Employment and Training, Guindy, Chennai – 600 032.**<br>**Type of Account: Savings Account**<br>**Account No : 6595159627**<br>**Name of the Bank: Indian Bank, Besant Nagar Branch, Chennai**<br>**IFSC Code : IDIB000B068**<br>**MICR Code : 600019073**<br>விண்ணப்ப கட்டணமானது எந்த தொழிற்பள்ளிக்காக செலுத்தப்பட்டுள்ளது என்பதை Indian Bank, Besant Nagar வங்கியிலிருந்து பெறப்படும் Statementல் கண்டறிய ஏதுவாக தாளாளர் பெயரில் உள்ள வங்கி கணக்கிலிருந்து RTGS/NEFT மூலம் செலுத்துமாறு தெரிவிக்கப்படுகிறது. |

**II. விண்ணப்பங்களை இணையதளத்தில் சமர்ப்பித்தல்**

| | | |
|---|---|---|
| 1.அ. | அங்கீகாரம் பெற்று செயல்படும் தொழிற் பள்ளிகள் அங்கீகாரம் புதுப்பித்தல் / புதிய தொழிற்பள்ளிகள் / புதிய தொழிற்பிரிவுகள் / கூடுதல் அலகு கோரி விண்ணப்பிக்கும் தொழிற்பள்ளிகள் | **28.02.2025 அன்று இரவு 11.59–க்குள் இணையதளம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.** |

ஏற்கனவே செயல்படும் தொழிற்பள்ளிகள் அங்கீகாரம் புதுப்பிக்க வேண்டி குறித்த தேதியில் விண்ணப்பிக்கத் தவறினால் இந்த வருடம் அங்கீகாரம் வழங்க இயலாது மற்றும் 2025–2026 கல்வி ஆண்டில் பயிற்சியாளர்கள் சேர்க்கை மேற்கொள்ள அனுமதி இல்லை. அங்கீகார புதுப்பிப்பு / புதிய தொழிற்பள்ளிகள் / புதிய தொழிற் பிரிவுகள் / கூடுதல் அலகுகள் அங்கீகார ஆணை பெறப்பட்ட பின்னரே சேர்க்கை மேற்கொள்ள வேண்டும்.

ஆணையரகத்தில் பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவம் பெற்றபின், அனைத்து கடித போக்குவரத்துகளும் தொழிற்பள்ளியின் பெயரில் தான் நடைபெறும். எனவே, தொழிற்பள்ளியின் முகவரி, Email, தொலைபேசி மற்றும் கைபேசி எண் (இருப்பின்) அவைகளின் விவரத்தினை விண்ணப்ப படிவத்தில் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

தொடங்கப்படவுள்ள தொழிற்பள்ளியின் பெயர் கண்டிப்பாக தொழிற்பள்ளி என முடியும்படி பெயரிடப்பட வேண்டும். (உதாரணத்திற்கு – XXX. கேட்டரிங் தொழிற்பள்ளி). கண்டிப்பாக கல்லூரி, ஐடிஐ என பெயரிடக்கூடாது.

**2. ஆய்வு கட்டணம் :**

அங்கீகாரம் புதுப்பித்தல் / புதிய தொழிற் பிரிவு / கூடுதல் அலகு / புதிய தொழிற்பள்ளிகள் ஆகியவை தொடர்பான ஆய்வு கட்டணம் ரூ.8,000/–ஐ கீழ்க்கண்ட வங்கி கணக்கில் RTGS/NEFT வாயிலாக

செலுத்தி அந்த RTGS/NEFT எண் **மற்றும் Application No.ஐ (உதாரணம் N106200049572410 and 210001)** இணையதள விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

**Account Name: Deputy Director (IS) and Assistant Accounts Officer,**
**Department of Employment and Training, Guindy,**
**Chennai – 600 032.**
**Type of Account : Savings Account**
**Account No : 6595159627**
**Name of the Bank: Indian Bank, Besant Nagar Branch, Chennai**
**IFSC Code : IDIB000B068**
**MICR Code : 600019073**

ஆய்வு மேற்கொள்ள சம்பந்தப்பட்ட தொழிற்பள்ளி தயார் நிலையில் இல்லை என நிராகரிக்கப்படும் நேர்வில், அரசு கணக்கில் செலுத்தப்பட்ட ஆய்வு கட்டணம் மற்றும் விண்ணப்ப கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பி தரப்பட மாட்டாது மற்றும் இணையதள விண்ணப்பம் பதிவேற்றம் செய்யாமல் அரசு கணக்கில் செலுத்தப்பட்ட ஆய்வு கட்டணம் மற்றும் விண்ணப்பம் கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பி தரப்பட மாட்டாது என்பதுடன், 2025–2026–ஆம் கல்வியாண்டிற்கு மட்டுமே இது செல்லுபடியாகும். அடுத்த கல்வியாண்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**3. பாடத்திட்டம்**

2025–2026 ஆம் கல்வியாண்டில் அங்கீகாரம் வழங்கப்படும் நீண்டகால தொழிற்பிரிவுகளின் பட்டியல் மற்றும் பொது பாடத்திட்டம் இணையதளத்தில் உள்ளது.

**4. தொழிற்பிரிவுகள் / அலகுகள்**

பொது பாடத்திட்டத்தில் கருவிகள், தளவாடங்கள் / இயந்திரங்கள் 1 + 1 அலகுகளுக்காக கொடுக்கப்பட்டுள்ளது. ஆய்வின் அடிப்படையில் தொழிற்பிரிவுகளுக்கு 1 + 1 அலகுகளுக்கு அங்கீகாரம் வழங்கப்படும் நேர்வில்;

அ) ஒரு வருட பயிற்சி காலமுள்ள தொழிற்பிரிவுகளுக்கு அங்கீகாரம் மற்றும் அங்கீகார புதுப்பிப்பு அடிப்படையில் வருடத்திற்கு 2 அலகுகளுக்கு சேர்க்கை மேற்கொள்ளலாம்.

ஆ) இரண்டு வருட பயிற்சி காலமுள்ள தொழிற்பிரிவுகளுக்கு அங்கீகாரம் மற்றும் அங்கீகார புதுப்பிப்பு அடிப்படையில் வருடத்திற்கு 1 அலகு வீதம் மொத்தம் 2 அலகுகள் மட்டுமே சேர்க்கை மேற்கொள்ள வேண்டும்.

இ) மூன்று வருட பயிற்சி காலமுள்ள தொழிற்பிரிவுக்கு அங்கீகாரம் மற்றும் அங்கீகார புதுப்பிப்பு அடிப்படையில் முதல் இரு ஆண்டுகளுக்கு ஆண்டுக்கு 1 அலகு வீதம் மொத்தம் 2 அலகுகள் மட்டுமே சேர்க்கை மேற்கொள்ளலாம். ஆனால் மூன்றாம் ஆண்டிற்கு சேர்க்கை மேற்கொள்ளக்கூடாது. மேற்கண்ட தொழிற்பிரிவில் எந்த ஓர் ஆண்டிலும் 2 அலகுகளுக்கு மேல் பயிற்சியாளர்கள் பயிற்சி பெறக்கூடாது.

**ஆய்வின் அடிப்படையில், தகுதி வாய்ந்த பயிற்றுநர் குறைபாடு அல்லது பிற குறைபாடு காரணமாக 1 அலகிற்கு மட்டுமே அங்கீகாரம் வழங்கப்படும் நேர்வில்;**

ஈ) ஒரு வருட பயிற்சி காலமுள்ள தொழிற் பிரிவுகளுக்கு அங்கீகாரம் மற்றும் அங்கீகார புதுப்பிப்பு அடிப்படையில் வருடத்திற்கு 1 அலகிற்கு சேர்க்கை மேற்கொள்ளலாம்.

உ) இரண்டு வருட பயிற்சி காலமுள்ள தொழிற் பிரிவுகளுக்கு அங்கீகாரம் மற்றும் அங்கீகார புதுப்பிப்பு அடிப்படையில் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை 1 அலகிற்கு அதாவது ஓராண்டு விட்டு ஓராண்டிற்கு (Alternative year) 1 அலகிற்கு மட்டுமே சேர்க்கை மேற்கொள்ள வேண்டும்.

ஊ) மூன்று வருட பயிற்சி காலமுள்ள தொழிற்பிரிவுக்கு அங்கீகாரம் மற்றும் அங்கீகார புதுப்பிப்பு அடிப்படையில் முதலாம் ஆண்டு மட்டுமே 1 அலகு சேர்க்கை மேற்கொள்ள வேண்டும். அப்பயிற்சியாளர்கள் மூன்றாண்டு பயிற்சி காலம் முடித்த பின்னரே மீண்டும் 1 அலகிற்கு சேர்க்கை மேற்கொள்ளலாம்.

**III ஆய்வு மேற்கொள்ளுதல்**

1. புதிய தொழிற்பள்ளிகள் / தொழிற்பிரிவுகளுக்கு அங்கீகாரம் / அங்கீகார புதுப்பிப்புக்கான ஆய்வு 01.03.2025 முதல் 30.04.2025 க்குள் மண்டல பயிற்சி இணை இயக்குநர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு சமர்ப்பிக்கப்படும் ஆய்வறிக்கையின் அடிப்படையில் ஜூன் மாதம் 30ம் தேதிக்குள் அங்கீகாரம் வழங்கப்படும்.
2. ஆய்வுக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதியில் தயார் நிலையில் இல்லை என்றால் ஆய்வு மேற்கொள்ளாமல் அங்கீகாரம் வழங்கப்பட மாட்டாது. விண்ணப்பம் முற்றிலும் நிராகரிக்கப்படும் எக்காரணத்தினாலும் மறு ஆய்வு செய்ய இயலாது.
3. அங்கீகாரம் கோரும் தொழிற்பிரிவு / அலகுக்கு ஏற்ப பாடத்திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளபடி அனைத்து கருவிகள் / தளவாடங்கள் மற்றும் இயந்திரங்கள் ஆய்வின் போது ஆய்வு அலுவலரிடத்தில் காண்பிக்கப்பட வேண்டும். இருப்புப்பதிவேடு ஒன்று துவக்கப்பட்டு அதில் கருவிகள், தளவாடங்கள் / இயந்திரங்களின் விவரங்கள் பதிவு செய்திருக்க வேண்டும். தொழிற்நுட்ப விவரங்கள், விலை விவரம், எண்ணிக்கை விவரம், எந்த நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டது போன்ற விவரங்கள் இப்பதிவேட்டில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கருவிகள், தளவாடங்கள் / இயந்திரங்கள் இவற்றில் ஏதேனும் இருப்பு இல்லாமல் இருந்தால் அங்கீகாரத்திற்கு பரிந்துரைக்க இயலாது.
4. பணிமனை மற்றும் வகுப்பறைகள் RCC Building / கட்டிடத்தின் மீது சிமெண்ட் ஓடுகள் போடப்பட்டிருக்க வேண்டும். மேலும் பொதுப்பாடத்திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளபடி தேவையான இடவசதி பெற்றிருக்க வேண்டும். கூரை வேய்ந்த இடம் / தற்காலிக கூரை உள்ள தொழிற்பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்க இயலாது.
5. பணிமனை மற்றும் வகுப்பறைகளுக்கு தொழிற்பிரிவு வாரியாக தேவையான இடஅளவு வழிகாட்டுதல் (Guidelines) கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அறைகளில் பணிமனை மற்றும் வகுப்பறைகள் அமைந்திருக்க வேண்டும். உதாரணமாக பணிமனை 500 சதுர அடி என்றால் 500

சதுர அடியில் ஒரே அறையாக இருக்க வேண்டும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அறைகளை இணைத்து 500 சதுரஅடியாகக் காண்பிக்கக்கூடாது.

6. இடத்தின் உரிமையாளர் எனில், அதற்கான கிரய பத்திர ஆவண நகல் இணைக்கப்பட வேண்டும். வாடகை / குத்தகைக்குரிய இடமாக இருந்தால் ஒப்பந்தம் செய்யப்பட்ட வாடகை / குத்தகை ஒப்பந்த பத்திர ஆவணம் குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு இருக்க வேண்டும். மேலும், வாடகை ஒப்பந்தம் / குத்தகை ஒப்பந்தம் பதிவு துறையில் பதிவு செய்திருக்க வேண்டும்.

7. போதுமான கழிப்பிட வசதி / தண்ணீர் வசதி போன்றவை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

8. சரியான காற்றோட்டம், போதுமான வெளிச்சம் ஆகியவை இருக்கும்படி செய்முறை கூடம் மற்றும் வகுப்பறைகள் அமைந்திருக்க வேண்டும்.

9. செய்முறை கூடம் மற்றும் வகுப்பறைகளுக்கு நுழைவு வாயில் அமைக்கப்பட்டிருப்பதுடன், ஆபத்து / அவசர சமயத்தில் வெளியேற தனி வழி அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

10. பாதுகாப்புக்கான முன்னெச்சரிக்கை வழிமுறைகளை பின்பற்றுவதுடன், தீயணைப்புத்துறை அதிகாரியிடமிருந்து தீ தடையின்மை சான்று நடப்பு கல்வியாண்டில் பெற்றிருக்க வேண்டும். மற்றும் அதனை ஆய்வு அலுவலரிடம் ஆய்வு நேரத்தில் காண்பிக்க வேண்டும்.

11. தனியார் தொழிற்பள்ளிகள் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் அனைத்தையும் பூர்த்தி செய்து தயார் நிலையில் இருக்க வேண்டும். முதன்மை கட்டிடம், பணிமனை கட்டிடம், முதல்வர் அறை, பயிற்றுநர்கள் அறை, அலுவலக அறை, வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் போன்ற துணைக்கட்டிடங்கள் முறைப்படி கட்டுமானம் செய்யப்பட்டிருக்க வேண்டும். கருவிகள் மற்றும் இயந்திரங்கள் அதனைச் சார்ந்த துணை சாதனங்கள் மற்றும் இயந்திரங்கள் பொது பாடத்திட்டத்தின்படி கொள்முதல் செய்யப்பட்டிருக்க வேண்டும். மும்முனை மின்இணைப்பு மற்றும் இயந்திரங்களுக்கு உரிய மின் இணைப்பு கொடுத்து, அதனை இயங்கும் நிலையில் தயார் செய்து வைத்திருக்க வேண்டும். விண்ணப்பித்துள்ள அனைத்து தொழிற்பிரிவுகளுக்கும் / அலகுகளுக்கும் ஏற்ப இவற்றை தயார் படுத்தி வைத்திருப்பதுடன், பொது பாடத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ள மின்திறன் அளவு, குறித்து மின்சார வாரியத்திடம் உரிய சான்று தொழிற்பள்ளி பெற்றிருக்க வேண்டும்.

12. தொழிற்பள்ளிகள் ஒவ்வொன்றும் தனியாக அமைய பெற்றிருப்பதுடன், வேறெந்த அங்கீகரிக்கப்பட்ட / ஒப்பளிப்பு செய்யப்பட்ட / இணைந்து செயல்படக்கூடிய கல்வி நிறுவனத்துடன், கட்டிடங்கள் / கருவிகள் / உள்கட்டமைப்பு வசதிகள் பயிற்றுநர்கள் போன்றவைகள் பகிர்ந்து செயல்படும் வகையில் இருக்கக்கூடாது.

13. பயிற்சியாளர் தொழிற்பள்ளிகளில் சேருவதற்கான கல்வித்தகுதி, வயது வரம்பு அனைத்தும் பொதுப்பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ளவாறு இருத்தல் வேண்டும்.

14. இணையதளத்தில் தேவையான கருவிகள் மற்றும் தளவாடங்கள் / இயந்திரங்கள் விவரம் 1+1 அலகுகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் கூடுதல் அலகுகள் தேவைப்படும் நேர்வில் அதற்கேற்ப

கூடுதல் கருவிகள் வசதி இருக்க வேண்டும்.

15. தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின் ரூ.2,50,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) –க்கான கூட்டு வைப்புத்தொகை கணக்கு ரசீது நகல். இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, மற்றும் தொழிற்பள்ளி தாளாளர் **(தொழிற்பள்ளியின் முகவரியுடன்)** ஆகிய இருவரையும் இணைத்து (The Commissioner of Employment and Training and the Correspondent, Name of IS with full address) எடுத்ததாக இருத்தல் வேண்டும். For Example, The Commissioner of Employment and Training and the Correspondent XXX Industrial School, Anna Nagar, Chennai என்பது போல் இருக்க வேண்டும். டிரஸ்ட் அல்லது சொசைட்டி பெயரில் இருக்கக் கூடாது.

**IV. ஆய்வின்போது கீழ்க்கண்ட ஆவணங்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும்.**

1. விண்ணப்ப படிவத்தின் ஜெராக்ஸ் நகல்
2. ஏற்கனவே அங்கீகாரம் பெற்று அங்கீகாரம் புதுப்பிக்க / கூடுதல் அலகுகள் பெற விண்ணப்பித்து இருந்தால் பழைய அங்கீகார ஆணையின் நகல்.
3. தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின் ரூ.2,50,000/–க்கான கூட்டு வைப்புத்தொகை செலுத்திய கணக்கு ரசீது நகல். (கூட்டு வைப்பு தொகையானது ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, மற்றும் தொழிற்பள்ளி தாளாளர் **(தொழிற்பள்ளியின் முகவரியுடன்)** ஆகிய இருவரையும் சேர்த்ததாக இருத்தல் வேண்டும். For Example, The Commissioner of Employment and Training and the Correspondent XXX Industrial School, Anna Nagar, Chennai என்பது போல் இருக்க வேண்டும். டிரஸ்ட் அல்லது சொசைட்டி பெயரில் இருக்கக்கூடாது.
4. கட்டிடம் உரிமை சான்று அ) சொந்த கட்டிடமாக இருப்பின், கிரய பத்திர நகல் ஆ) வாடகை / குத்தகை கட்டிடமாக இருப்பின், ஒப்பந்தம் செய்யப்பட்ட வாடகை / குத்தகை பத்திர நகல் (குறைந்தது 5 வருடங்களுக்கு ஒப்பந்தம் இருக்க வேண்டும்) சமர்ப்பிக்க வேண்டும். வாடகை / குத்தகை பதிவுத்துறையில் பதிவு செய்திருக்க வேண்டும்.
5. கட்டிட உறுதித்தன்மைக்கான சான்றிதழ் (Stability certificate from Chartered Engineer consisting Form A, Form B, Form C and Declaration Form) உரிய படிவத்தில் பெறப்பட்டு சமர்ப்பிக்க வேண்டும்.
6. தமிழ்நாடு பொது கட்டிட உரிமம் (Public Building License) உரிய அலுவலரிடமிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.
7. சுகாதார சான்றிதழ் (Sanitary Certificate) உரிய அலுவலரிடமிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

8. தீயணைப்புத்துறையினரிடமிருந்து தீ தடையின்மை சான்று பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

9. மேற்கண்ட வரிசை எண். 5 முதல் 8 வரை குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்கள் செல்லத்தக்க காலம் (validity period) முடிவுறும்போது உடனே புதுப்பிக்க வேண்டும். அதற்கான உறுதிமொழி சமர்ப்பிக்க வேண்டும். சான்றிதழ்கள் புதுப்பிக்கப்படவில்லை எனில் அச்சான்றிதழ்களின் காலம் முடிவுற்ற தேதியுடன் தொழிற் பள்ளியின் அங்கீகாரம் முடிவுற்றதாக கருதப்படும்.

10. தொழிற்பள்ளியின் மின் இணைப்பு சான்றிதழ், மின் அட்டை நகல் (மின் இணைப்பு எண், மின் திறன் அளவு (கிலோ வாட்) மின் உபயோகத்திற்கான பணம் செலுத்திய விவரங்களுடன் மின்திறன் அளவை (கிலோ வாட்) உறுதிபடுத்த மின்வாரியத்திடமிருந்து பெற்ற கடித நகல் மேலும் கணினி மூலம் மின்வாரிய இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் சமர்ப்பிக்க வேண்டும்.

11. தொழிற்பள்ளியில் ஆரம்பிக்கப்பட உள்ள தொழிற்பிரிவுகளின் பெயர் மற்றும் அலகுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, பாடத்திட்டத்தில் உள்ள வரிசை எண்படி கருவிகள், தளவாடங்கள் இயந்திரங்கள் பட்டியல், தேவையான எண்ணிக்கை, இருப்பிலுள்ள எண்ணிக்கை, சதவீத விவரம் (உரிய படிவத்தில்) சமர்ப்பிக்க வேண்டும்.

**தொழிற் பிரிவின் பெயர்** **மொத்த அலகுகள்**

| S.No | Name of the Tools and Equipments | No. of items as per Syllabus | No. of items available | Shortage if any |
|---|---|---|---|---|
| | | | | |

12. ஏற்கனவே அங்கீகாரம் பெற்று செயல்படும் தொழிற் பள்ளிகளுக்கு முகப்பில் இரண்டு பெயர் பலகைகள் நீல நிறத்தில் வெள்ளை நிற எழுத்துக்களில் வைக்கப்பட வேண்டும். முதலாவது பெயர் பலகை 8 அடி நீளமும், 3 அடி உயரமும் கொண்டதாக இருக்க வேண்டும். அதில் தொழிற் பள்ளியின் பெயர், முகவரி மற்றும் அங்கீகார ஆணை விவரம் குறிக்கப்பட்டு தனியாக வைக்க

வேண்டும். இரண்டாவது பெயர் பலகை 4 அடி நீளமும், 8 அடி உயரமும் கொண்டதாக இருக்க வேண்டும். அதில் அங்கீகாரம் வழங்கப்பட்ட தொழிற்பிரிவுகளின் பெயர்கள் மற்றும் அலகுகள் (Units), தொழிற் பிரிவின் கால அளவு, சேர்க்கைக்கான கல்வித்தகுதி மற்றும் சேர்க்கை அளவு (Seating Capacity) ஆகியவை குறிப்பிட்டிருக்க வேண்டும். தொழிற் பயிற்சி நிலையம் (I.T.I) என விளம்பரப்படுத்துவது மற்றும் பெயர் பலகை வைப்பது கூடாது. இதனை மீறினால் தொழிற்பள்ளியின் அங்கீகாரம் முன் அறிவிப்பின்றி இரத்து செய்யப்படும்.

13. பணியமர்த்தப்பட்டுள்ள ஆசிரியர்களின் (அ) நியமனக் கடிதம், (Appointment Order) (ஆ) பணிசேர் அறிக்கை, (Joining Report) (இ) கல்வித்தகுதிக்கான சான்றிதழ் நகல்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

**பயிற்றுநர் விபரம்**

| S.No | Name of the Instructor | Designation | Trade in which appointed | Qualification / Experience |
|---|---|---|---|---|
| | | | | |

14. அ) தொழிற்பள்ளி வளாகத்தில் மற்ற கல்வி சார்ந்த நிறுவனங்கள், இதே நிர்வாகத்தின் மூலம் செயல்படுமானால், அதன் அங்கீகார விவரங்கள் சமர்ப்பிக்க வேண்டும். ஆ) இதே நிர்வாகத்தினர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள இதர தொழிற்பயிற்சி மையம் / தொழிற்பள்ளிகளின் விவரங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.
15. நூலகப்புத்தகங்களின் பட்டியல் சமர்ப்பிக்க வேண்டும்.
16. தொழிற்பள்ளி கட்டிடத்தின் முகப்பு புகைப்படம் அனைத்து தொழிற்பிரிவுகளின் வகுப்பறைகள் மற்றும் செய்முறை அறையில், கருவிகள், தளவாடங்கள் மற்றும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டு அவை யாவும் இயங்கும் வகையில் உள்ளவாறு காட்டும் புகைப்படம் மற்றும் கழிவறை புகைப்படங்கள் மற்றும் அதனை குறுந்தகட்டில் பதிவு செய்யப்பட்டு சமர்ப்பிக்க வேண்டும்.
17. தொழிற்பள்ளி கட்டிடத்தின் ப்ளூ பிரிண்ட் வரைபடம் தொழிற்பிரிவுகளின் செய்முறைக்கூடம் மற்றும் வகுப்பறை விவரம் நீளம் X அகலம் அளவுகளுடன் சதுர அடி தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். மற்றும் தொழிற்பள்ளி அமைந்துள்ள இடம் காட்டும் அமைவிட வரைபடம் (Location Map)ல் அரசின் (Punchayat, Municipal, Corporation) ஒப்புதல் பெற்றிருக்க வேண்டும்.
18. புதிய தொழிற் பள்ளிகள், கருவிகள் / தளவாடங்கள் கொள்முதல் செய்தமைக்கான பட்டியலின் நகல் சமர்ப்பிக்க வேண்டும்.
19, விண்ணபதாரர் தற்போது விண்ணப்பிக்கும் தொழிற்பள்ளி தவிர ஏற்கனவே வேறு இடத்தில் தொழிற்பள்ளி / தொழிற்பயிற்சி மையம் நடத்துபவராக இருந்தால், அவை பற்றிய முழு

விவரங்களையும் , தனியாக சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்படி ஆவணங்கள் அனைத்தும் இணைக்கப்படாத / ஆவணங்களில் குறைபாடு / இடவசதி குறைபாடு / கருவிகள் குறைபாடு / பயிற்றுநர் குறைபாடு ஆகிய அனைத்து ஆவணங்களிலும் (புகைப்படங்கள் உட்பட) தொழிற்பள்ளியின் முதல்வர் / தாளாளர் கையொப்பம் இல்லாத ஆய்வறிக்கைகள் நிராகரிக்கவும் மற்றும் புதிதாக தொடங்கும் தொழிற்பள்ளிகளின் விண்ணப்பங்களை ஏற்கவும் அல்லது நிராகரிக்கவும் இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அவர்களுக்கு தனிப்பட்ட முழு அதிகாரம் உண்டு.

## V. இதர வழிகாட்டுதல்கள்

1. தொழிற்பள்ளியை ஓரிடத்தில் இருந்து வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய இயக்குநர் அவர்களின் அனுமதியின்றி மாற்ற இயலாது. குறிப்பிடப்பட்ட முகவரியில் உள்ள தொழிற்பள்ளியில் ஆய்வு மேற்கொண்டு, அதனடிப்படையில் அங்கீகாரம் வழங்கப்பட்ட பிறகு வேறு முகவரிக்கு மாற்றம் செய்யும் பட்சத்தில் அத்தொழிற்பள்ளியின் அங்கீகாரம் தானாகவே ரத்து ஆகிவிடும். இடமாற்றம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால், கல்வியாண்டின் தொடக்கத்திலேயே மாணவர்களின் பயிற்சி பாதிக்காத வகையில் மாற்றப்பட வேண்டும். அவ்வாறு மாற்றம் செய்யக்கோரி விண்ணப்பித்த விண்ணப்பத்தின் பேரில் அந்த கல்வியாண்டின் ஏப்ரல் மாதத்திற்குள் ஆய்வு மேற்கொள்ளப்படும். அங்கீகாரம் பெறப்பட்ட பின்னரே சேர்க்கை அனுமதிக்கப்படும். அங்கீகார ஆணை பெறப்படாமல் பயிற்சியாளர்கள் சேர்க்கை செய்யப்பட்டால் அத்தொழிற்பள்ளி பயிற்சியாளர்களின் சேர்க்கைக்கு ஒப்புதல் வழங்கப்பட மாட்டாது.
2. புதிதாக அங்கீகாரம் பெறும் எந்த ஒரு தொழிற்பள்ளியும் அரசிடமிருந்து தொடர் மற்றும் தொடரா (Recurring and Non recurring) செலவினங்கள் பெற முடியாது.
3. தொழிற்பள்ளியில் செயல்படுத்தப்படும் / நடைமுறைப்படுத்தப்படும் எந்த ஒரு தொழிற்பிரிவும் முழு நேர பயிற்சி அளிக்கக்கூடியதாகவும், வாரத்திற்கு 44 மணி நேரம் பயிற்சி அளிக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.
4. தொழிற்பள்ளியில் செயல்படும் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பிரிவுகளை ஒருங்கிணைத்து பட்டம் (Degree) / பட்டயம் (Diploma) போன்ற சான்றிதழ் தனியாக வழங்க இத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பள்ளிகளுக்கு அதிகாரம் இல்லை. இது சம்பந்தமாக புகார்கள் வரப்பெற்று நிரூபிக்கப்பட்டால், எவ்வித தகவலுமின்றி, உடனடியாக தொழிற்பள்ளியின் அங்கீகாரம் ரத்து செய்யப்படும்.
5. இத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட பாடதிட்டத்தையும், வழிகாட்டு நெறிமுறைகளையும் பின்பற்றப்பட வேண்டும். காலத்திற்கு ஏற்ப மாற்றம் தேவைப்படும் சமயங்களில் எப்போது

வேண்டுமானாலும் எந்த முறையிலும் பாடதிட்டத்தினை மற்றும் விதிகளை மாற்றி அமைக்க இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.

6. அனைத்து கேட்டரிங் பயிற்சிகள் தொழிற்பள்ளி முறையின்படி தனித்தனி பயிற்சிகளாக ஒரு வருட காலமே அளிக்கப்பட வேண்டும். இரண்டு அல்லது மூன்று பயிற்சிகளை ஒன்றாகச் சேர்த்து, இரண்டு அல்லது மூன்று ஆண்டு கால டிகிரி, டிப்ளமோ பயிற்சி அளிப்பதாக தொழிற்பள்ளியின் முன்போ, செய்திதாள்களிலோ மற்றும் விளம்பர பலகைகளிலோ அறிவித்தல் கூடாது. அரசு கோபுர சின்னத்தினை, இத்துறையின் அனுமதியின்றி பயன்படுத்தி தவறான செய்திகளை பொது மக்களுக்கு விளம்பரப்படுத்தக்கூடாது. ஏதாவது பொய் விளம்பரங்களோ, பிரசுரங்களோ வெளியிடப்பட்டு, இத்துறைக்கு தெரிய வந்தால், தொழிற் பள்ளியின் அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி உடனடியாக ரத்து செய்யப்படும். மற்றும் தேவைப்படின் கிரிமினல் நடவடிக்கை தொடரப்படும்.

7. தொழிற்பள்ளி பயிற்சியாளர் சேர்க்கைக்கு ஏதாவது முன்னோடி நாளிதழில் விளம்பரம் செய்ய விரும்பினால், விளம்பரம் செய்ய விரும்பும் தகவல் / விவரங்கள் அந்தந்த மண்டல பயிற்சி இணை இயக்குநர் அவர்களிடம் ஒப்புதல் பெற்று பின் விளம்பரம் அளிக்கப்பட வேண்டும். **உண்மையல்லாத, தவறான தகவல்கள் தொழிற்பள்ளியினால் வெளியிடப்பட்டு, பொது மக்களை தவறான வழியில் கொண்டுபோகும் நிலையினை ஏற்படுத்தினால் எவ்வித முன்னறிவிப்புமின்றி தொழிற்பள்ளியின் அங்கீகாரம் ரத்து செய்யப்படும்.**

8. தனியார் தொழிபள்ளிகள் தாங்கள் அங்கீகாரம் பெற்ற பிறகு துறையிடமிருந்து பெறப்பட்ட பொது பாடத்தின்படி உரிய காலத்திற்குள் பயிற்சிகளை நடத்த வேண்டும். மாணவர்களை துறையின் மூலம் ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் நடத்தப்படும் இறுதி தேர்வு / பொது தேர்விற்கு தயார் படுத்த வேண்டும்.

9. தொழிற்பள்ளி பொது பாடத்திட்டத்தின்படி, இத்துறையின் கீழ் பயிற்சி அளிக்கப்படும் தொழிற் பிரிவு பற்றிய விவரங்கள் 2025-2026.ம் கல்வியாண்டு பட்டியல் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. இணைப்பில் உள்ள தொழிற்பிரிவுகளை தவிர வேறெந்த தொழிற்பிரிவிற்கும் 2025-2026-ல் இத்துறையின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட மாட்டாது. மாணவர்களின் வயது வரம்பு மற்றும் பயிற்சியில் சேர்வதற்கான குறைந்தபட்ச கல்வித்தகுதி ஆகியன, ஒவ்வொரு தொழிற்பிரிவிற்கும், இணைப்பில் விவரமாக வழங்கப்படுவதுடன், அங்கீகார ஆணையிலும் தெரிவிக்கப்படும். அதன்படி கல்வித்தகுதியும், வயது வரம்பும் உள்ளவர்களே பயிற்சியில் சேர்க்கப்பட வேண்டும். கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பு ஆகியவற்றிற்கு விலக்கு அளிக்கப்பட மாட்டாது.

10. அங்கீகாரம் வழங்கப்பட்ட தொழிற்பள்ளிகளில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பிரிவுகளில் மட்டுமே பயிற்சி நடத்திட வேண்டும். அங்கீகாரம் வழங்கப்பட்ட இடத்தில் வேறு துறை மூலம் அங்கீகாரம்

பெற்ற தொழிற் பிரிவுகளை நடத்திட அனுமதி இல்லை.

11. அங்கீகாரம் வழங்கப்பட்ட தொழிற்பள்ளிகளுக்கு இத்துறையால் வழங்கப்படும் சான்றிதழ் தவிர தனியாக எவ்வித பயிற்சியும், சான்றிதழும் வழங்கிட அனுமதியில்லை.

12 தொழிற்பள்ளிகளில் மாணவர் சேர்க்கையில் பிற மாநிலங்களில் 8ம் வகுப்பு / SSLC முடித்தவர்கள் Migration மற்றும் Equivalent சான்றிதழ்கள் சமர்ப்பித்து சேர்க்கை கோரலாம்,

**Annexure - 1**

**Department of Employment and Training (Training Wing)**

## State Council for Vocational Training

### List of Trades for Industrial Schools Long Term courses

| Sl No. | Sector / Name of the Trade | No. of Items (Tools and Equipments) | Duration | Basic Entry Qualification | Space for Workshop / Lab (in.Sq.ft) | Space for Theory Class (in.Sq.ft) | Power in KW | Age |
|---|---|---|---|---|---|---|---|---|
| **I** | **AUTOMOBILE - ENGINEERING** | | | | | | | |
| 1 | Automobile Mechanic | 71 | 1Year | 8th Pass | 500 | 200 | 2 | 14-40 |
| 2 | Auto Electrician | 81 | 1Year | 8th Pass | 400 | 200 | 2 | 14-40 |
| 3 | Marine Diesel Mechanic | 125 | 1Year | 8th Pass | 400 | 200 | 2 | 14-40 |
| 4 | Two & Four Wheeler Mechanic | 104 | 1Year | 8th Pass | 400 | 200 | 2 | 14-40 |
| 5 | Motor vehicle Mechanism & Maintenance | 71 | 2Years | 8th Pass | 500 | 200 | 2 | 14-40 |
| **II** | **CARPENTER - ENGINEERING** | | | | | | | |
| 6 | Carpentry & Wood Working | 102 | 1Year | 8th Pass | 500 | 200 | 3 | 14-40 |
| 7 | Carpentry and Cabinet Making | 102 | 3years | 8th Pass | 500 | 200 | 3 | 14-40 |
| **III** | **ELECTRICAL - ENGINEERING** | | | | | | | |
| 8 | Electrical Techinican | 118 | 1Year | 8th Pass | 400 | 200 | 3 | 14-40 |
| **IV** | **ELECTRONICS - ENGINEERING** | | | | | | | |
| 9 | Mechanic General Electronics | 107 | 1Year | 8th Pass | 400 | 200 | 3 | 14-40 |
| 10 | Mechanic Audio | 47 | 1Year | 8th Pass | 400 | 200 | 3 | 14-40 |
| 11 | Mechanic Video | 50 | 1Year | 8th Pass | 400 | 200 | 3 | 14-40 |
| 12 | Electrical & Electronics Technician | 60 | 2Years | 8th Pass | 400 | 200 | 3 | 14-40 |
| **V** | **FITTER - ENGINEERING** | | | | | | | |
| 13 | Bench Fitter | 51 | 1Year | 8th Pass | 450 | 200 | 3 | 14-40 |
| 14 | Industrial Fitter | 132 | 2Years | 8th Pass | 450 | 200 | 5 | 14-40 |
| 15 | Fitter - Cum -Basic Machine Operator | 85 | 1Year | 8th Pass | 450 | 200 | 10 | 14-40 |
| 16 | Fitter - Cum - Blacksmithy | 136 | 3 Years | 8th Pass | 800 | 200 | 5 | 14-40 |
| 17 | Fitter (Deaf & Dumb) | 103 | 2Years | 8th Pass | 450 | 200 | 3 | 14-40 |
| **VI** | **REFRIGERATION AND AIR - CONDITIONING - ENGINEERING** | | | | | | | |
| 18 | Mechanic Refrigeration and Air Conditioning and Central Plant | 94 | 1 Year | 8th Pass | 400 | 200 | 3 | 14-40 |
| 19 | Refrigeration and Air Conditioning Mechanism and Maintenance | 117 | 2 Years | 8th Pass | 400 | 200 | 5 | 14-40 |
| **VII** | **SPECIAL MACHINE OPERATOR - ENGINEERING** | | | | | | | |
| 20 | CNC Machine Operator Cum Programmer | 57 | 1Year | 8th Pass | 800 | 200 | 10 | 14-40 |
| 21 | Gem & Diamond Cutting & Polishing | 20 | 1Year | 8th Pass | 500 | 200 | 2 | 14-40 |
| 22 | Lathe Operator | 54 | 1Year | 8th Pass | 550 | 200 | 7 | 14-40 |
| 23 | Milling Machine Operator | 17 | 1Year | 8th Pass | 1000 | 200 | 10 | 14-40 |
| 24 | Surface & Cylindrical Grinder Operator | 16 | 1Year | 8th Pass | 1000 | 200 | 15 | 14-40 |
| 25 | Precision Machinist | 123 | 1Year | 8th Pass | 600 | 200 | 15 | 14-40 |
| **VIII** | **WELDER - ENGINEERING** | | | | | | | |
| 26 | Welding Technician | 66 | 1Year | 8th Pass | 600 | 200 | 6 | 14-40 |
| 27 | Advanced Welding Technician | 86 | 1Year | 8th Pass | 1000 | 200 | 25 | 14-40 |
| **IX** | **SURVEYOR - ENGINEERING** | | | | | | | |
| 28 | Engineering Surveyor | 16 | 1Year | 10th Pass | 300 | 200 | 3 | 14-40 |

| Sl No. | Sector / Name of the Trade | No. of Items (Tools and Equipments) | Duration | Basic Entry Qualification | Space for | | Power in KW | Age |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Workshop / Lab (in.Sq.ft) | Theory Class (in.Sq.ft) | | |
| **X** | **CIVIL - ENGINEERING** | | | | | | | |
| 29 | Mason Technician | 52 | 1Year | 8th Pass | 800 | 200 | 1 | 14-40 |
| 30 | Plumbing Technician | 52 | 1Year | 8th Pass | 800 | 200 | 1 | 14-40 |
| **XI** | **CATERING AND HOTEL MANAGEMENT - NON ENGINEERING** | | | | | | | |
| 31 | Bakery and Confectionary | 73 | 1Year | 8th Pass | 450 | 200 | 3 | 14-40 |
| 32 | Food Production | 175 | 1Year | 8th Pass | 600 | 200 | 3 | 14-40 |
| 33 | Food and Beverage Service | 118 | 1Year | 8th Pass | 500 | 200 | 2 | 14-40 |
| 34 | Front Office & Hotel Operational Management | 85 | 1Year | 8th Pass | 400 | 200 | 2 | 14-40 |
| 35 | House Keeping Management | 100 | 1Year | 8th Pass | 350 | 200 | 2 | 14-40 |
| **XII** | **COMPUTER TRADES - NON ENGINEERING** | | | | | | | |
| 36 | Advanced Programming & System analysis | 28 | 1Year | 10th Pass | 300 | 200 | 3 | 14-40 |
| 37 | Computer Software Package | 19 | 1Year | 10th Pass | 300 | 200 | 3 | 14-40 |
| 38 | Advanced Intergrated Software Technology | 28 | 1Year | 10th Pass | 300 | 200 | 3 | 14-40 |
| 39 | Data Processing & Computer Application | 28 | 1Year | 10th Pass | 300 | 200 | 3 | 14-40 |
| 40 | Computer Soft ware & Hardware Maintenance | 27 | 1Year | 10th Pass | 300 | 200 | 3 | 14-40 |
| 41 | Computer Soft ware Programming | 25 | 1Year | 10th Pass | 300 | 200 | 3 | 14-40 |
| 42 | Computer Software Technology | 9 | 1Year | 10th Pass | 300 | 200 | 3 | 14-40 |
| **XIII** | **PRINTING - NON ENGINEERING** | | | | | | | |
| 43 | Book Binder | 32 | 1Year | 8th Pass | 300 | 200 | 2 | 14-40 |
| 44 | Hand Compositor & Proof Reader | 25 | 1Year | 8th Pass | 400 | 200 | 2 | 14-40 |
| 45 | Offset Printing | 29 | 1Year | 8th Pass | 400 | 200 | 6 | 14-40 |
| 46 | Printing Machine Operator | 43 | 1Year | 8th Pass | 450 | 200 | 4 | 14-40 |
| **XIV** | **TEXTILES - NON ENGINEERING** | | | | | | | |
| 47 | Cutting and Tailoring | 28 | 1Year | 8th Pass | 400 | 200 | 2 | 14-40 |
| 48 | Tailoring (Boys) | 38 | 1Year | 8th Pass | 400 | 200 | 2 | 14-40 |
| 49 | Embroidery and Needle Work | 23 | 1Year | 8th Pass | 200 | 200 | 2 | 14-40 |
| 50 | Needle Work, Dress Marking & Embroidery | 33 | 2Years | 8th Pass | 400 | 200 | 2 | 14-40 |
| 51 | Ready made Production | 36 | 1Year | 8th Pass | 400 | 200 | 2 | 14-40 |
| 52 | Fashion Designing, cutting and Co-Ordination | 36 | 1Year | 8th Pass | 400 | 200 | 2 | 14-40 |
| 53 | Technical Teacher Certificate (TTC) | 39 | 10 Months | 10th Pass Cutting & Tailoring + Embroidery & Needle work or Needle work Dress Making and Embroidery (or) Embroidery Higher Grade and Needle Work Dress Making Higher Grade | 400 | 200 | 0.5 | 14-40 |

| Sl No. | Sector / Name of the Trade | No. of Items (Tools and Equipments) | Duration | Basic Entry Qualification | Space for | | Power in KW | Age |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Workshop / Lab (in.Sq.ft) | Theory Class (in.Sq.ft) | | |
| **XV** | **COMMERCIAL - NON ENGINEERING** | | | | | | | |
| 54 | Business Management | 17 | 1Year | 10th Pass | 300 | 200 | 3 | 14-40 |
| 55 | Corporate Secretaryship | 21 | 1Year | 8th Pass | 400 | 200 | 3 | 14-40 |
| 56 | Stenography | 24 | 1Year | 10th Pass | 600 | 200 | 3 | 14-40 |
| 57 | Ornamental Wood Carving | 57 | 2Years | 8th Pass | 600 | 200 | 4 | 14-40 |